STTU

# தமிழாசிரியர் குரல்

*The Tamil Teachers' Voice*

MICA (P) 123/22/2019

செப்டம்பர் 2020






## உள்ளே....


- தலையங்கம்
- மே தின விருது
- **PBM** விருது
- உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல்
- உறுப்பினர்களுக்கான பகிர்வரங்குகள்
- அத்தியாவசிய உள்நாட்டுச் சேவைக் குழு குறித்த விவரங்கள்
- **NTUC** மகளிர் அணி குறித்த விவரங்கள்
- மலாக்காச் சுற்றுலா
- தமிழகப் பேராசிரியர்களுடன் ஒரு கலந்துரையாடல்
- புதுச்சேரி முத்தமிழ் விழா
- உலகத் தமிழாசிரியர் மாநாடு, சென்னை
- தமிழவேள் நினைவுக் கருத்தரங்கம்
- உறுப்பினர்களுக்கான அன்பளிப்புகள்
- உறுப்பினர்களுக்கான சலுகை அட்டை






# தலையங்கம்

## தமிழாசிரியர் பற்றாக்குறை

இன்று பள்ளிகளில் தமிழாசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. கடந்த காலங்களில் இப்பிரச்சினையைக் களைய இந்தியாவிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். 1990-களில் அவ்வாறு அமர்த்தப்பட்ட சுமார் 30 ஆசிரியர்களின் வேலை ஒப்பந்தம் நிறைவுபெற்ற பிறகு நீட்டிக்கப்படவில்லை. சங்கத்தின் தலையீட்டினால் அவர்களின் வேலை ஒப்பந்தம் நீட்டிக்கப்பட்டது. அவர்களில் பலர் நிரந்தர ஆசிரியர்களாயினர். பலர் சிங்கப்பூர்க் குடியுரிமையும் பெற்று, நம்முடைய ஆசிரியர் அணிக்கு வலிமை சேர்த்தனர்.

சங்கம் உள்ளூரில் தமிழாசிரியர்களை உருவாக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தது. கல்வி அமைச்சும் பல்வேறு முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக் கழகத்தில் (SUSS) சங்கத்தின் முயற்சியால் 2006-இல் பட்டக்கல்வி தொடங்கப்பட்டு இதுவரை 300-க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் உருவாகியுள்ளனர். பலதுறைத் தொழிற்கல்லூரியிலும் தமிழாசிரியர் பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது. தற்போது தேசியக் கல்விக் கழகத்திலும் (NIE) பட்டக் கல்வி பெற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழாசிரியர் பணியில் சேர்வதற்கு நேர்முகத் தேர்வுக்குச் சென்றவர்களில் பலர் தெரிவு செய்யப்படுவதில்லை என்ற குறைகூறல்கள் எழுந்துள்ளன. தெரிவு செய்யப்படாததற்குக் காரணம் என்ன என்று ஆராய வேண்டும். தற்போது நேர்முகத் தேர்வுக்குச் செல்வோர் கல்வியில் சிறந்து விளங்கினால் மட்டும் போதாது. அதற்கு வேறு பல திறன்களும் தேவை என்று அறிகிறோம். அவற்றைக் கண்டறிந்து தங்களைத் தகுதிப்படுத்திக் கொண்டு தேர்வுக்குச் செல்வது அவசியம்.

சில பள்ளிகளில் ஆசிரியர் பற்றாக்குறையால், பல வகுப்புகள் ஒன்றாக இணைத்துக் கற்பிக்கப்படுகின்றன. அதனால் தமிழ் மாணவர்களின் மொழித்தரம் பாதிக்கப்படுகிறது. ஆகவே, கல்வி அமைச்சு தமிழாசிரியர் பற்றாக்குறையைப் போக்க, ஆவன செய்யவேண்டும் எனச் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

**ஒன்று பட்டால் உண்டு வாழ்வு!**
**நம்மில் ஒற்றுமை நீங்கில்**
**அனைவர்க்கும் தாழ்வே!**
**- மகாகவி பாரதியார்**

# இரங்கல்



சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தில் வெவ்வேறு காலங்களில் உறுப்பினராகவும் கிட்டத்தட்ட 18 ஆண்டுகள் மதிக்கத்தக்கத் தலைவராகவும் செயல்பட்ட திரு. சாமி வீராசாமி அவர்கள் ஜூலை 4 2020 அன்று தமது 81-ஆவது வயதில் காலமானார். சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தின் முக்கியத் தூண்களில் ஒருவராகத் திகழ்ந்த திரு. வீராசாமி, ஆசிரியர்களின் நலனுக்காகவும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும் அரும்பாடுபட்டவர்.

பதவி ஓய்வு பெற்ற பிறகும் திரு. வீராசாமி சங்கத்தில் நிர்வாகச் செயலாளராகப் பணியாற்றினார். அப்போது அவர் செயலவைக்கு வழிகாட்டியாகவும் செயல்பட்டார். சிங்கப்பூரில் 1995, 1997-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தமிழ்மொழி வார ஏற்பாட்டுக் குழுவின் ஆலோசகராகவும் இருந்து அந்த விழாவின் வெற்றிக்கு முக்கியக் காரணமாகத் திரு. வீராசாமி இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



1992-ஆம் ஆண்டில் திரு. வீராசாமி அவர்களின் தலைமையில் முதல் உலகத் தமிழாசிரியர் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. தமிழ்கூறும் நல்லுலகில் இம்மாநாடு வரலாறு படைத்தது என்றால் அது மிகையாகாது.



தமிழாசிரியர்கள் தங்கள் கல்வித் தகுதியையும் தொழில் தகுதியையும் வளர்த்துக்கொண்டு, சமூகம் சங்கத்தை மதிக்கும் அளவுக்குப் பணிபுரிய வேண்டும் என்பதில் அவர் முனைப்பாய் இருந்தார். சங்கம் வலிமை பெற்றால் தமிழாசிரியர் சிறப்படைவர்; சங்கம் தொடர்ந்து நன்முறையில் செயல்படத் தமிழாசிரியர்களின் ஆதரவும் உழைப்பும் இன்றியமையாதது என்பதையும் அடிக்கடி வலியுறுத்தி வந்தவர் அமரர் சாமி வீராசாமி.

# தமிழவேள் நினைவுக் கருத்தரங்கம்

ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற 2019 தமிழ்மொழி விழாவின் ஓர் அங்கமாக நம் சங்கம், 17.04.19 நாளன்று 'தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் மரபும் பண்பாடும்' என்னும் கருப்பொருளில் தமிழவேள் நினைவுக் கருத்தரங்கத்தை நடத்தியது.






சுமார் 270 தமிழாசிரியர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். புகழ்பெற்ற தன்முனைப்புப் பேச்சாளரான Dr. காதர் இப்ராஹீம் அவர்கள் கருத்தரங்கத்தில் முதன்மையுரை நிகழ்த்தி-னார். அதையடுத்து நடைபெற்ற கலந்துரையாட-லின்போது (Panel Forum) நம் நாட்டில் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் தமிழாசிரியர்கள் நம் மரபையும் பண்பாட்டையும் இணைப்பதில் எதிர்நோக்கும் சவால்கள் யாவை, அவற்றைச் சமாளிக்கத் தமிழாசிரியர்கள் எத்தகைய அணுகு-முறைகளைப் பயன்படுத்தலாம் ஆகியவை தொடர்பான பல கருத்துகள் பகிர்ந்துகொள்ளப்-பட்டன.

கலந்துரையாடலின்போது கருத்தரங்கப் பங்கேற்பாளர்கள் எழுப்பிய வினாக்களுக்குச் சங்கத் தலைவர் திரு. சாமிக்கண்ணு அவர்களின் தலைமையில், Dr. காதர் இப்ராஹிம், தலைமை முதன்மை ஆசிரியர் Dr. ஜெயராஜதாஸ் பாண்டியன், தேசியக் கல்விக்கழக இணைப்பேராசிரியர் Dr. சீதாலக்ஷ்மி ஆகியோர் தங்கள் கருத்துகளைப் பகிர்ந்துகொண்டார்கள்.



# தொழிலாளரின் தோழர் - மே தின விருதாளருக்கு வாழ்த்துகள்

பல ஆண்டுகளாகத் தொழிலாளர்களின் முன்னேற்றத்துக்காகச் சிறந்த தொண்டாற்றிய திருமதி மான்விழிக்குத் ‘தொழிலாளர்களின் தோழர்’ விருது வழங்கப்பட்டது.

தொழிலாளர்களுக்கு உழைப்புக்குத் தகுந்த ஊதியம், வேலையிடத்தில் சிறந்த நலன்கள், சிறந்த வாய்ப்புகள் முதலியவற்றைப் பெற்றுத்-தர உதவியதால் திருமதி மான்விழிக்கு இந்த விருது வழங்கப்பட்டது. அதற்குச் சங்கம் பெருமை அடைகின்றது.




# தமிழகப் பேராசிரியர்களுடன் ஒரு கலந்துரையாடல்

சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தின் ஒருங்கிணைப்பில் 2019-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26-ஆம் நாள் நடைபெற்ற தமிழகப் பேராசிரியர்களுடன் கலந்துரையாடல் நிகழ்வில் மதுரை அமெரிக்கன் கல்லூரி உதவிப் பேராசிரியர் முனைவர் சே. பாலகிருஷ்ணன் “தமிழ் இலக்கியங்களில் நவீனத்துவமும் பின்னை நவீனத்துவமும்” எனும் பொருண்மையில் உரை நிகழ்த்தினார். ‘கீழடி எனும் தொல்நகரம்’ என்ற தலைப்பில் மதுரைக் கல்லூரி உதவிப் பேராசிரியர் முனைவர் ந.இரத்தினகுமார் உரை நிகழ்த்தினார்.








# PBM விருதாளருக்கு வாழ்த்துகள்



"உன்னால் முடிந்தவரை சேவையாற்று; முடியாதபோது வருந்தாதே. காரணம், யாரும் உன்னைக் குறை சொல்லமாட்டார்கள்". இக்கூற்றுதான் நான் முதன் முதலில் தொண்டூழியம் செய்ய அடிப்படையாக இருந்தது. இது சமீபத்தில் அமரரான என் தந்தை எனக்குக் கூறிய மந்திர வார்த்தையாகும். இதுவே எனது நம்பிக்கையுமாகும். என் இதயம் அனுமதிக்கும்வரை நான் தொண்டூழியம் புரிய விரும்புகிறேன். என்னைப் போன்று தொண்டூழியம் புரியும் இந்தியர்களுக்கு இவ்விருது ஓர் உந்துதலாக அமையும் என நம்புகிறேன்."

சாந்தி ராமையன் (திருமதி முருகவேல்)

# செயலவை உறுப்பினர்கள் 2017 - 2020

தலைவர்
- சி. சாமிக்கண்ணு

உதவித் தலைவர்
- முனைவர் பொன். சசிகுமார்

பொதுச் செயலாளர்
- தனபால் குமார்

துணைப் பொதுச் செயலாளர்
- முனைவர் கோ. விஜயராணி

உதவிப் பொதுச் செயலாளர்
- அஸ்மது பீவி

பொதுப் பொருளாளர்
- காசி. வீராசாமி

உதவிப் பொதுப் பொருளாளர்
- முனைவர் முஹைதீன் நிசார் அன்வர்

செயலவை உறுப்பினர்கள்
- திருமதி சரசு பூபதி
- திருமதி மான்விழி பாண்டியன்
- முனைவர் இரா. விமலன்
- திருமதி கமலா தேவி
- திருமதி சாந்தி முருகவேல், PBM
- கோ. கிருஷ்ணமூர்த்தி
- பாலாஜி ஹரிதாஸ்

நெறியுரைஞர்கள்
- மு. அ. மசூது
- பொன். சுந்தரராசு

உள் தணிக்கையாளர்கள்
- கு. உத்தமன்
- எஸ். மோகன்

அறங்காவலர்கள்
- முனைவர் தமிழரசி சுப்பிரமணியன்
- முனைவர் ஆ. ரா. சிவகுமாரன்
- இரா. அன்பரசு

# CONSULTANT FROM NATIONAL TRADES UNION CONGRESS



**Mr. Timothy Phang is the Industrial Relations Consultant** from NTUC supporting STTU. He took over from Mdm. Thamizhchelvi from NTUC in December 2019. He is presently working as Deputy Director of NTUC Workforce (Union) and Executive Secretary of AUPDRW (Amalgamated Union of Public Daily Rated Workers. He has been seconded to NTWU, UWEEI and MIWU to support the unions.

He has more than 15 years' experience in handling the Industrial Relations issues, grievances and workers issues and strengthen the membership of the unions. He is interested in working with the union leaders to strengthen the union and helping the workers in workplace issues and skills upgrading of workers. He is keen and open to meet members together with key leaders to discuss and see what help NTUC could provide.

*" NTUC is a national confederation of trade unions as well as a network of professional associations and partners across all sectors in Singapore. NTUC's objectives are to help Singapore stay competitive and workers remain employable for life; to enhance the social status and well-being of our members and working people; and to build a strong, responsible and caring labour movement. NTUC's vision is to be an inclusive labour movement for all collars, ages and nationalities. At NTUC, we strive to help workers of all collars, ages and nationalities achieve gainful employment through better jobs, and a better living through higher wages so they can live a better life. Apart from protecting the rights and advancing the interests of our workers, NTUC also strives to support working families through the various stages of their lives and moderate their cost of living. "*

*Best Regards,*

*Timothy Phang*
*Industrial Relations Consultant*
*National Trades Union Congress*

# உறுப்பினர்களுடனான மெய்நிகர் கலந்துரையாடல்

ஜூலை.4.2020 அன்று சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம் ‘ZOOM’ தளத்தில் ஏற்பாடு செய்திருந்த மெய்நிகர் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி! கலந்துரையாடல் நிகழ்ச்சி மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. உறுப்பினர்களின் அக்கறைக்குரிய அம்சங்களையும் கருத்துகளையும் நாங்கள் தெரிந்துகொள்ள அது நல்லதோர் வாய்ப்பாக அமைந்தது. கலந்துகொண்ட உறுப்பினர்களும் மகிழ்ச்சி தெரிவித்தனர். தொடர்ந்து இவ்வாறான நிகழ்ச்சிகளை நடத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர். கூட்டத்தில் பகிர்ந்துகொள்ளப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்த விழைகிறோம். அவற்றைப் பின்வரும் மூன்று பிரிவுகளாகப் பிரித்துச் செயலாற்றவிருக்கிறோம்.

1) பணித்திறன் மேம்பாடும் வளர்ச்சியும்
2) தமிழும் நாமும்
3) தமிழ்மொழி கற்றல் கற்பித்தல்

# ஏழாம் மூவாண்டுப் பொதுக்கூட்ட அறிவிப்பு

நமது சங்கத்தின் ஏழாவது மூவாண்டுப் பொதுக்கூட்டம் 26 செப்டம்பர் 2020 அன்று காலை 10.30 மணிக்கு மெரினா பொலவார்டில் அமைந்துள்ள NTUC மையத்தில் நடைபெறவுள்ளது. பொதுக்கூட்டத்திற்குப் பதிவு செய்வதற்கான மின்முறியும் விரைவுத் தகவல் குறியீடும் உறுப்பினர்களுக்கு ஆகஸ்டு மாதம் 24ஆம் தேதி மின்னஞ்சல்வழி அனுப்பிவைக்கப்பட்டது. தங்கள் வருகை உறுதியைப் பதிவு செய்துகொண்ட உறுப்பினர்கள் மட்டும் குறித்த நேரத்தில் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.




**NTUC Centre, 1 Marina Boulevard**
**Singapore 018989**
**MRT : Raffles Place, Exit J**

# மலாக்காச் சுற்றுலா
# 2019 செப்டம்பர்




தமிழாசிரியர் சங்கத்தின் ஆதரவில் நாங்கள் மேற்கொண்ட மலாக்காச் சுற்றுலா நினைவில் இனித்திடும் ஒன்றாகும். 14 பெண் ஆசிரியர்களை வழிநடத்திச்சென்ற ஒரே ஆண்மகன் திரு. பாலாஜி ஆவார். அப்பணியை அவர் மிகச் சிறப்பாகச் செய்தார்.





காலையில் பேருந்துப் பயணத்தைத் தொடங்கிய நாங்கள், மதியத்திற்குள் மலாக்கா சென்றுவிட்டோம். அன்று இரவு நாங்கள் மலாக்கா நீரணையில் மேற்கொண்ட படகுச் சுற்றுலா மிக அருமை. இரு கரைகளிலும் துலங்கிய கட்டடங்கள், கடைத்-தொகுதிகள், மின்னிய விளக்குகள், மரஞ் செடி கொடிகள் ஆகியவற்றை மெல்லக் கடந்து சென்றது வரலாற்றையும் நினைவுறுத்தின. அடுத்த நாள் நாங்கள் பார்த்த வரலாற்றுக் காட்சிக்கூடம், கைவினைப் பொருள்களின் விற்பனைக்கூடம், வழிபாட்டுத்தலங்கள், ‘பாத்தேக்’ துணியில் வரைதல், மலாய்ப் பலகாரங்கள் செய்துபார்த்தல், பம்பரங்-களைச் சுழற்றி விளையாடியது ஆகிய யாவும் பழைய நினைவுகளைக் கண்முன் நிறுத்தின.

சுவைமிக்க உணவுகளை உண்டு களித்து, அருமையான, வசதிமிக்க விடுதியில் தங்கி, பேருந்தில் மீண்டும் இளமை திரும்பிய நிலையில் கொட்டமடித்துப் பயணித்து வந்தது என்றும் மறக்கவியலா நினைவுகள் ஆகும். மிகவும் பாதுகாப்பாக, அலுப்பின்றிப் பல வரலாற்றுப் பின்னணிகளை விளக்கிய வண்ணம் அறிவுக்கும் விருந்தாய் அமைந்த ஒரு பயணமாகும்.

நம் சங்கம் மீண்டும் இதுபோன்ற பயணத்தை (இயலும்போது) ஏற்பாடு செய்ய வேண்டும் என்று முன்மொழிகின்றோம். வாழ்க எங்கள் சங்கம். வளர்க அதன் சேவைகள்.

என்றும் நினைவில்,

அ. மல்லிகா
(யீசூன் இன்னோவா தொடக்கக் கல்லூரி)

# மலாக்காச் சுற்றுலா
# 2019 செப்டம்பர்

ஆசிரியர் தினத்தை முன்னிட்டுச் சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்ததின் வெளிநாட்டுப் பயண ஏற்பாடு பாராட்டுதற்குரியது. கலந்துகொண்ட என்னைப் போன்ற ஆசிரியர்களுக்கு இது ஒரு சிறந்த அனுபவமாக இருந்தது. இதுபோன்று ஆசிரியர்களுடன் (மாணவர்கள் இல்லாமல்) ஒரு பயணத்தை மேற்கொள்வது எனக்கு இதுவே முதல்முறை.



இந்தப் பயணம் நம் பணியைப் பற்றி மற்ற ஆசிரியர்களுடன் பேசிக்கொள்ளவும் மற்ற பள்ளி ஆசிரியர்களுடன் நட்புறவை வளர்த்துக்கொள்ளவும் வழிவகுத்தது. வருடத்தின் இறுதியை அடையும் தருவாயில் இடம்பெற்றதால் அந்த ஆண்டைப் பற்றிச் சிந்திக்கவும் கலந்துரை-யாடவும் மேலும் நம்மை எவ்வாறு மேம்படுத்திக்கொள்ளலாம் என்பதைப் பார்வையிடவும் இப்பயணம் வழிவகுத்தது.





இன்பமாகவும் பயனுள்ள விதமாகவும் நேரத்தைக் கழிக்க ஆசிரியர் சங்கம் பல நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்திருந்ததோடு ஒவ்வொரு வேளையும் வாய்க்கு ருசியான வயிறு நிறைந்த உணவு அளித்ததையும் எண்ணி மகிழ்கிறேன். இதுபோன்று மேலும் பல வெளிநாட்டுப் பயணங்களை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறேன்.

ஆஷிகா
பாடத்திட்ட மேம்பாட்டு அதிகாரி,
கல்வி அமைச்சு

# அத்தியாவசிய உள்நாட்டுச் சேவைகள் குழு

எதிர்காலப் பொருளாதார மன்றம் (Future Economic Council) அமைத்துள்ள ஆறு துணைக் குழுக்களில் ஒன்று Essential Domestic Services (EDS) எனப்படும் அத்தியாவசிய உள்நாட்டுச் சேவைகள் குழுவாகும். இந்தத் துணைக் குழு மிக முக்கிய உள்நாட்டு சேவைத் துறைகளான சுகாதாரத் துறைகளில் உள்ள தொழிற்சங்கங்கள், கல்வித் துறைகளில் உள்ள தொழிற்சங்கங்கள் மற்றும் சார்பிலா(freelance) பயிற்றுவிப்பாளர்களைக் குறிக்கும் NICA எனப்படும் தேசிய பயிற்றுவிப்பாளர் சங்கம் ஆகிய சங்கங்களின் இணைப்பாகும். இந்தக் குழு ஒன்றிணைந்து மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொழிற்சங்க உறுப்பினர்களின் தேவைகளைக் கவனித்துக்கொள்கிறது.

அத்தியாவசிய உள்நாட்டுச் சேவைகள் குழு,

அ) ஒரே தொழில்துறையில் (சுகாதார மற்றும் கல்விசார்ந்த தொழில்துறைகள்) பணியாற்றுவோர் சந்திக்கும் பொதுவான சவால்களைப் பகுப்பாய்வு செய்து விவாதிக்கிறது. விவாதத்தின்போது உதிக்கும் கருத்துகளைச் சேகரித்து, தொழில்-துறை சார்ந்த பிரச்சினைகள் குறித்து ஆலோசனைகள் வழங்குகிறது.

ஆ) குழுமக் கூட்டு முயற்சிகள் மூலம் தேசிய தொழிற்சங்கக் காங்கிரசுடன் இணைக்கப்பட்டுள்ள பிற தொழிற்சங்கங்களின் உறுப்பினர் சேர்க்கை, பயிற்சி வகுப்புகள், வேலை வாய்ப்புகள் போன்றவை தொடர்பான முக்கியப் பணித்திட்டங்களுக்கும் முயற்சிகளுக்கும் ஆதரவு கரம் நீட்டுகிறது.

இ) தொழில்துறை மாற்ற வரைபடத்தின் (Industry Transformation Maps - ITMs) செயலாக்கத்தை மேற்பார்வையிடுவதோடு, ஊழியர்களின் ஆர்வத்தை மேம்படுத்துவதில் முத்தரப்புப் பங்காளிகளுடன் நெருக்கமாகப் பணியாற்றுகிறது.

ஈ) குழுமத்தில் இருக்கும் தொழிற்சங்கங்கள் மற்றும் முத்தரப்பு பங்காளிகளுக்கிடையே உள்ள பிணைப்பை வலுப்படுத்தி அவை குழுவாகச் செயல்படுவதை ஊக்குவிக்கிறது.

உ) செயல் திட்டங்கள் செயல்படுத்துவதைக் கண்காணிக்கின்றது. இந்தக் குழுவில் சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தின் பிரதிநிதியாகச் சேவையாற்றி வருபவர் முனைவர் விஜயராணி.

# உறுப்பினர்களுக்கான மெய்நிகர் பகிர்வரங்கம் 1


*பகிர்வரங்கம் 1 : 15 ஆகஸ்டு 2020 (சனிக்கிழமை)*
*நேரம் : காலை 10.00 மணி முதல் காலை 11.00 மணி வரை*

பகிர்வு 1 - சிங்கப்பூர்க் கற்பித்தல் முறைமையின் வழி (STP) முன்னுணர்வுக் கருத்தறிதலைக் கற்பித்தல்.
பகிர்பவர் : திரு. அந்தோணி ராஜ் ஜோசஃப், சுவா சூ காங் உயர்நிலைப் பள்ளி.

சுவா சூ காங் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் திரு அந்தோணி ராஜ் ஜோசப் அவர்களால் இப்பகிர்வில் சிங்கப்பூர்க் கற்றல் முறைமையிலுள்ள கற்றல் கூறுகளை ஆசிரியர்கள் எவ்வகைகளில் தங்கள் வகுப்பறைக் கற்றல் கற்பித்தலில் பயன்படுத்துவது என்பது குறித்துப் பகிர்ந்துகொள்ளப்பட்டது. எண்பதுக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பகிர்வில் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.







# உறுப்பினர்களுக்கான மெய்நிகர் பகிவர்வரங்கம் 1

பகிர்வரங்கம் 1 : 15 ஆகஸ்டு 2020 (சனிக்கிழமை)
நேரம் : காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை

பகிர்வு 2 - ஒபெல் (Opal 2.0) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கற்றல் மற்றும் கற்பித்தலில் புதுமையும் புத்தாக்கமும்.
பகிர்பவர் : திரு லூயிஸ் ஐசக் குமார், பார்ட்லி உயர்நிலைப் பள்ளி

பார்ட்லி உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் திரு. லூயிஸ் ஐசக் குமார் அவர்களின் பகிர்வில், ஆசிரியர்கள் மேம்படுத்தப்பட்ட OPAL2.0 தளத்தை எவ்வாறு தங்கள் பணித்திறன் மேம்பாட்டிற்குப் பயன்படுத்திக்கொள்வது என்றும், OPAL2.0 தளத்தில் உள்ள சிறப்பு அம்சங்கள் குறித்தும் தெரிந்துகொண்டார்கள். மேலும், இந்தத் தளத்தைப் பயன்படுத்தி எவ்வாறு தங்கள் கற்றல் கற்பித்தல் வளங்களைப் பள்ளி, குழுமம் மற்றும் தேசிய அளவில் தமிழாசிரியர்களுடன் பகிர்ந்துகொள்வது என்றும் தெரிந்துகொண்டனர்.







# NTUC பெண்கள் அணி

தொழிலாளர் இயக்கத்தின் முக்கியத் தூண்களில் ஒன்று NTUC பெண்கள் அணியாகும். இக்குழு மத்தியக் குழுவால் பணிபுரியும் பெண்களின் நலன், சம்பளம் மற்றும் தொழில் முன்னேற்றம் ஆகியவை குறித்துக் குரல் எழுப்பவே உருவாக்கப்-பட்டது. மேலும் பெண்களின் வாழ்வாதாரத்தையும் தொழிலையும் தக்கவைப்பதை முக்கியமான குறிக்கோளாகக் கொண்டு தொழிலாளர் இயக்கத்தோடு இணைந்து செயலாற்றி வருகிறது. இப்பெண்கள் அணியில் தமிழாசிரியர் சங்கத்தின் பிரதிநிதி-களாகக் குமாரி அஸ்மது பீவி, திருமதி பூபதி, திருமதி மான்விழி ஆகிய மூவரும் இடம்பெற்றுள்ளனர். பெண்கள் அணியைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஓராண்டுக்கு நான்கு முறை சந்தித்துப் பணிபுரியும் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள் குறித்துக் கலந்துரையாடுவார்கள். மேலும் பணித்திட்டக் கருத்தரங்கு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு அதில் பெண்களைப் பாதிக்கக்கூடிய வேலையிடத்துப் பிரச்சினைகள், தலைமைத்துவம் மற்றும் உறுப்பினர் சேர்க்கை குறித்தும் பேசப்பட்டது. கோவிட் 19 கிருமித்தொற்றின் போது மேற்கொண்ட முக்கியப் பணிகள் பின்வருமாறு.

- கோவிட்-19 கிருமிப் பரவலின்போது தன்னலம் கருதாமல் முன்னின்று சேவையாற்றிய பாலர் பள்ளி ஆசிரியர்களையும், ஊழியர்களையும் சிறப்பிக்கும் வகையில் பெண்கள் அணியைச் சேர்ந்தவர்கள் 16.000 பராமரிப்புப் பைகளைத் தயார் செய்யும் பணியில் ஈடுபட்டனர்.
- வேலை செய்யும் தாய்மார்களின் நண்பர்களாக அவர்களின் நலனில் அக்கறை கொண்டு மற்றத் தொழிற் சங்கங்களோடும் பொதுநல அமைப்புகளோடும் இணைந்து பணிபுரியும் பெண்களுக்காகப் பல முக்கிய உதவிகள் வழங்கப்-பட்டன. அவற்றுள் GRAB நிறுவனத்தோடு இணைந்து பயண அட்டைகளில் 5,778 பேருக்கு தளா $9.00 வெள்ளி வழங்கியது குறிப்பிடத்தக்கது ஆகும் .
- வெளிநாட்டு ஊழியர்கள் மற்றும் முன்னிலை ஊழியர்ளின் சேவையைப் பாராட்டி நன்றி தெரிவித்து ஊக்குவிக்கும் வகையில் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- பெண்கள் தலைமைத்துவம் குறித்த பயிலரங்குகள், கற்றல் பயணங்கள், சுய கற்றல் மேம்பாடு ஆகிய நடவடிக்கைகளிலும் இவ்வணியைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றுள்ளனர்.
- தற்போது நிலவி வரும் இக்கட்டான சூழ்நிலைகளிலும் இவ்வணி இணையம் வழி உரையாடல்களையும் பெண்களின் மேம்பாட்டுக்கான பட்டறைகளையும் தொடர்ந்து நடத்தி வருகிறது.

பெண்கள் அணியின் சார்பாக
திருமதி பூபதி


# உறுப்பினர்களுக்கான மெய்நிகர் பகிவர்வரங்கம் 2

பகிர்வரங்கம் 2 : 22 ஆகஸ்டு 2020 (சனிக்கிழமை)
நேரம் : காலை 10.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை

கல்விப் பயணம் – வெற்றிப் பாதையில்
பகிர்பவர் : திரு. சிவராஜன், பள்ளி முதல்வர்
தெக் வாய் உயர்நிலைப் பள்ளி

மேற்கண்ட மெய்நிகர் பகிர்வில் 63 ஆசிரியர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர். பள்ளி முதல்வர் திரு. சிவராஜன் தம் பகிர்வில் ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தலில் எவ்வாறெல்லாம் சிறப்புறத் திகழலாம் என்பதற்கான வழிமுறைகளைத் தம் வாழ்க்கை அனுபவத்தின் வாயிலாக எடுத்துக்காட்டுகள் கூறி விளக்கினார்.












பகிர்வரங்கின் நிறைவுரையை நிகழ்த்திய சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தின் உதவித் தலைவர் முனைவர் பொன். சசிகுமார், திரு. சிவராஜனின் கருத்துகள் ஆசிரியர்கள் தங்கள் பணித்திறன்களிலும் கற்றல் கற்பித்தலிலும் முன்னேற்றம் அடைவதற்கு ஊக்கமூட்டுபவையாக அமைந்திருந்தன என்று குறிப்பிட்டார். பயனுள்ள பல ஆலோசனைகளையும் வழிகாட்டுதலையும் வழங்கிய திரு. சிவராஜனுக்குத் தமிழாசிரியர் சங்கத்தின் சார்பில் முனைவர் பொன். சசிகுமார் நன்றியும் பாராட்டுகளும் தெரிவித்துக்கொண்டார்.

# உறுப்பினர்களுக்கான அன்பளிப்புகள்



இவ்வாண்டு ஆசிரியர்களுக்குப் பயன்படும் வகையில் இரண்டு நினைவுப் பொருள்களை அன்பளிப்பாக வழங்கச் சங்கம் முடிவெடுத்திருந்தது. ஆசிரியர்களுக்கான வருடாந்திர கூட்டத்தில் வழங்கப்படவிருந்த அன்பளிப்புகள் கிருமிப்பரவலின் காரணமாக உரிய நேரத்தில் வழங்கப்படாமல் போனது.

ஆசிரியர்களிடம் எப்படியாவது இவற்றைச் சேர்த்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில் செயலவை உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அதற்கான பணியில் ஈடுபட்டனர். 80 விழுக்காடு அன்பளிப்புப் பொருள்கள் அனுப்பப்பட்டுவிட்டன. மீதமுள்ளவை விரைவில் ஆசிரியர்களுக்குக் கிடைத்துவிடும். இந்தச் சவால் மிகுந்த காலத்தில் எதுவும் சாத்தியமே என்பதைச் செயலவை உறுப்பினர்கள் நிரூபித்துக் காட்டியுள்ளனர்.















# உறுப்பினர்கள் கலந்துகொண்ட இதர நிகழ்ச்சிகள்

## புதுச்சேரி முத்தமிழ் முகாம்







## 200 ஆண்டு வரலாறு கற்றல் பயணம்






## தமிழர் பேரவை தேசிய தின விருந்து



## நல்லாசிரியர் விருது 2019

விரிவான தகவல்கள் அடுத்த இதழில்



# உறுப்பினர்கள் கலந்துகொண்ட இதர நிகழ்ச்சிகள்

## உலகத் தமிழாசிரியர் மாநாடு, சென்னை





## சுகாதார அமைச்சுக்கு மொழிபெயர்ப்பு உதவி









# உறுப்பினர்களுக்கான சலுகை அட்டை

நம் சங்க உறுப்பினர்களுக்கு ஒரு நற்செய்தி. நமது தமிழாசிரியர் சங்கத்தில் தற்போது உறுப்பினர்களாக இருக்கும் அனைத்துத் தமிழாசிரியர்களுக்கும் சங்கத்தின் சார்பில் ஒரு சலுகை அட்டை ( Privilege Card ) வழங்கப்படும். அதில் உங்கள் பெயர் அச்சிடப்பட்டிருக்கும். உறுப்பினர்கள் சில வணிக நிறுவனங்களில் அந்தச் சலுகை அட்டையைப் பயன்படுத்திக் கட்டணக்கழிவு பெறலாம்.




உதாரணமாக, சகுந்தலா உணவகம், காயத்திரி உணவகம், அஞ்சப்பர் உணவகம் போன்ற சில உணவகங்களில் நம் உறுப்பினர்கள் நண்பர்களுடன் அல்லது குடும்பத்துடன் சாப்பிட்டாலோ, உணவு வாங்கிச் சென்றாலோ மொத்தக் கட்டணத்தில் *15%* கட்டணக் கழிவு கிடைக்கும்.

மேலும், குறிப்பட்ட சில நகைக்கடைகள், அழகு நிலையங்கள், பெண்களுக்கான ஆடைகள் தைக்கும் கடைகளில் நமது உறுப்பினர்கள் செலவிடும் மொத்தக் கட்டணத்தில் *10%* முதல் *15%* வரை கட்டணக்கழிவு கிடைக்கும் .




இதன் அனைத்து விவரங்களும் சலுகை அட்டையோடு உறுப்பினர்களுக்கு விரைவில் அனுப்பிவைக்கப்படும். பணி ஓய்வு பெற்ற நமது முன்னாள் உறுப்பினர்களுக்கும் சலுகை அட்டை வழங்கும் திட்டமும் உள்ளது.




# வேண்டுகோள்

தமிழாசிரியர் குரலில் உங்கள் பணி தொடர்பான நற்செய்திகள் இடம்பெற வேண்டுமானால் எங்களோடு தொடர்புகொள்ளுங்கள். மேலும் பள்ளி மாற்றம் அல்லது இல்ல முகவரி மாற்றம் இருந்தால் தயவுசெய்து சங்கத்திற்குத் தெரிவிக்கவும்.

நன்றி.

Published by SINGAPORE TAMIL TEACHERS' UNION
10, Jalan Besar, #13-08/09, Sim Lim Tower, Singapore 208787
Tel : 62935644 Fax : 62935824 Email : gen_sec@sttu.org.sg or admin@sttu.org.sg
Affiliated to NTUC & Education International

தமிழாசிரியர் குரல் இதழ் பொறுப்பாசிரியர்
முனைவர் முஹைதீன் நிசார் அன்வர்